பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஐப்பசி 15 (31—10—72) செவ்வாய் வெளியூர்: ஐப்பசி 16 (1—11—72) புதன் [இதழ்: 114

மின்சாரப் பற்றுக்குறை அபாய அறிவிப்பு

புதுடில்லி, அக். 31—

"மின்சாரப் பற்றுக்குறை இப்பொழுது இருப்பதைவிட இன்னும் கடுமையாகும்.

"இப்பொழுது நாடு முழுவதிலுமுள்ள மொத்த மின்சாரப் பற்றுக்குறை சுமார் 10 இலட்சம் கிலோவாட்; இந்தப் பற்றுக்குறை 1973 மார்ச் இறுதியில் 20 இலட்சம் கிலோவாட் ஆகிவிடும்போல் இருக்கிறது"

என்று மத்திய அமைச்சர் கே.எல். ராவ், நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கழகத்தை அழிக்க இதுவரையில் யாரும் பிறக்கவில்லை

இப்படியொரு கட்சியை உருவாக்க அண்ணா பிறந்து வந்தால்தான் முடியும்

இடையிலே வந்தவர் இடையிலேயே போனார்

தடம்புரளாத நாம் கடைசிவரை கழகத்தைக் கட்டிக் காப்போம் -- பேராசிரியர் க. அன்பழகன் முழக்கம்

சென்னை, அக். 31—

"தந்தை பெரியாரிடத்திலிருந்து பிரிந்துவந்த நாள் முதல் அண்ணாவைத் தலைவராக ஏற்று அவர் கருத்துக்கு மாறுபடாமல வாழ்ந்தவர்கள் நாங்கள்!

"எந்தக் காலத்திலும், ஒரு சிலரைப்போல் தடுமாறியதில்லை--தத்தளித்ததில்லை--இடம் தேடியதில்லை--ஒதுங்கி நின்றதில்லை--ஓய்வு கொண்டதில்லை--அடுத்தவன் வீட்டுத் திண்ணையில் அமர எண்ணியதில்லை!

"அண்ணாவின் இலட்சியத்திற்காக எங்களை அர்ப்பணித்தவர்கள நாங்கள்; அதற்காகத்தான் அன்றும் இருந்தோம்--இன்றும இருக்கிறோம்--நாளையும் இருப்போம்!

"தி.மு. கழகத்தை அழிக்க இதுவரை யாரும் பிறக்கவில்லை; இனிமேல் நாங்கள அழிந்து--மறைந்த பிறகு வேண்டுமானால் கழகத்தை அழிக்கலாம்!

"தி.மு. கழகம் போன்ற ஒரு பெரிய கட்சியை இனிமேல் அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்து வந்தால்தான உருவாக்க முடியும்"

என்று பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், வட சென்னையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்.

சென்னை, 7-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாநகராட்சி உறுப்பினர் வி. எஸ். ஆனந்தன் தலைமை வகித்தார்.

தோழர்கள் ஆர். ஆர். மூர்த்தி, இராசப்பா, ஜோசப் துரைமுகப் பகுதிச் செயலாளர் கே. எஸ் இலக்குமணன், முன்னாள் துணை மேயர் டி. வெங்கடேசன, பகுதி அவைத் தலைவர் நடராசன், மாவட்டத் துணைச் செயலாளர் சீதாபதி பொதுக் குழு உறுப்பினா முத்துராமலிங்கம், சட்ட மன்ற உறுப்பினர் மு. வேதாசலம், மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், மாநகராட்சி உறுப்பினர் இரா. மு. மனோகரன், பகுதிச் செயலாளர் பி ஏ.என்.ஏ.இராசரத்தினம, சென்னை மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மோடி சட்டமன்ற உறுப்பினா சுருளிவேலு, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் சுருளிவேலு, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினா வீராசாமி ஆகியோா பேசினர்.

இறுதியில் பேராசிரியர் க. அன்பழகன உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றிருப்பது தி.மு.க. கழகம்; அதைக் காப்பாற்றுகின்றசக்தி உங்களுக்கு உண்டு.

அறிஞர் அண்ணா அவர்களிடம் பள்ளிக்கூடத்தில படிக்கிற போதே பற்றுக்கொண்டு -- நல்ல எழுத்தாளராக--பின்னர் அரசியல் பேச்சாளராகி -- சிறிது காலம் பொருளாளராக இருந்து -- பின்னர், அமைச்சராகி -- முதலமைச்சராக -- கழகத்தலைவராக ஆனவர் கலைஞர்;

அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டு அண்ணா அவர்களின் பிரதிபலிப்பாக இருப்பவர் அவர்!

அவரைப் போன்றே மற்றவர்களும்! நாவலர் அவர்கள் அண்ணா அவர்களின் இதயத்தில் தனி இடம்பெற்று அண்ணாவின் நல்ல தம்பியாக உருவானவர்!

அவர்களைப் போலவே அண்ணா அவர்களிடம் துவக்க காலம் முதல் தொடர்பு கொண்டவன் நான்; அண்ணா அவர்களிடம் ஒரு நாள்கூட மாறுபாட்டைக் கண்டவன் அல்லன்; நான் சொல்லி அதற்கு மாறுபட்ட கருத்தைச் சொன்னவர் அல்லர் அண்ணா!

நாங்கள் அமைச்சர்களானதால் நாட்டு மக்களிடம் தலைவர்கள் ஆனவர்கள் அல்லர்!

இன்னும் சொல்லப்போனால், புரட்சி நடிகரைத் தெரியாத காலத்திலேயே நாங்கள் தலைவர்களாக உலா வந்தவர்கள்!

பெரியாரைத் தலைவராக ஏற்று நாங்கள் பணியாற்றிய காலம் 1946; அன்று அரசியல் தெரியாதவராக இந்த எம். ஜி. ஆர். இருந்தார்.

இந்தி எதிர்ப்பில் நாங்கள் ஈடுபட்டோம்; தமிழ்க்கொடி ஏந்தி வீதியில் நடந்து இந்தி ஆசிரியரிடம் அடிபட்டவர் கலைஞர் கருணாநிதி; அந்தக் காலம்-- 1938; அப்போது புரட்சி நடிகருக்குத் தமிழும் தெரியாது— இந்தி எதிர்ப்பும் புரியாது!

1949-ல் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை துவக்கினார்; அப்போது நாங்கள் 100 பேர் முதலில் கையெழுந்திட்டோம்; அப்போது புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். எங்கிருந்தார்— தெரியாது!

தி. மு. கழகம் மக்களிடம் செல்வாக்குப் பெற்றபோதுதான் எம். ஜி. ஆர். கழகத்திற்கு வந்தார்.

வந்தவர்களை 'வராதே' என்று சொல்லும் குறுகிய மனப்பான்மையும் இல்லை -- சூழ்ச்சி மனப்பான்மையும் இல்லை!

அவர் வந்தார் -- இருந்தார் -- வளர்ந்தார் --- உயர்ந்தார் --- புகழ் பெற்றார் -- இப்போது போயிருக்கிறார்!

இந்தப் புகழை வைத்துக் கொண்டு கழகத்தை அழிக்க நினைக்கிறார்.

'கழகத்தை அழித்துவிட்டுத்தான் மறுவேலை' என்று புறப்பட்டிருப்பவர்களுக்குக் கூறிக் கொள்வேன் -- 'கழகத்தை எங்களிடம் மட்டும் அண்ணா ஒப்படைத்துவிட்டுச் செல்லவில்லை; எங்களைப் போல் உங்களிடமும்தான் ஒப்படைத்துச் சென்றிருக்கிறார்' என்று!

இப்போது நீங்கள், 'கழகத்தை அழிப்போம்' எனகிறீர்களே-- அப்படியானால், நீங்கள் அண்ணனின் உண்மையான தம்பியாக மாட்டீர்கள்!"

சொத்துக் கணக்குக் காட்ட சிண்டிகேட் தலைவர் தயக்கம்

சொந்தக் கட்சிக்காரர் தீர்மானத்துக்கு ஆதரவு இல்லை

பூனா, அக். 31—

இங்கு நடந்து முடிவடைந்த அனைத்திந்திய சிண்டிகேட் மாநாட்டில், உத்தரப் பிரதேசம் பிரதிநிதியும் – தொழிலாளர் தலைவருமான இராஜாராம் பாண்டே என்பார், 'சிண்டிகேட் தலைவர்கள் தம் சொத்து விவரங்களைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்' என்று கோரினார்; ஆனால், அவரது கோரிக்கைக்குத் தலைவர்களிடம் சாதகமான கருத்து எழவில்லை -- ஆதரவு இல்லை -- ஊக்குவிப்பு இல்லை; எனவே அவர், தன் கோரிக்கையை வலியுறுத்தவில்லை.

கட்சியின் பொருளாதாரக் கொள்கை பற்றிய தீர்மானத்திற்குத் தந்த திருத்தம் ஒன்றிலேயே அவர் இந்தக்கோரிக்கையை விடுத்திருந்தார்.

பொருளாதாரக் கொள்கைத் தீர்மான விவாதத்தில் பங்கு கொண்ட மற்றொரு முக்கியஸ்தர் உ. பி.-யைச் சார்ந்த பனார்சிதாஸ் ஆவார்; அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கறுப்புப் பணத்தின் வளர்ச்சியும் அதை விரிவாகப் பயன்படுத்தும் முறைகளும் அபாயகரமான எல்லையை எட்டிவிட்டன!

"நாடெங்கும் எழும்பும் ஐந்து நட்சத்திர ஓட்டல்களும் – பல மாடிக் கட்டடங்களும், கறுப்புப் பணத்தையும், அவற்றைப் பதுக்கி வைத்திருப்போரையும் அடையாளம் காட்டும் சின்னங்களாகும்; ஆம் – இவையெல்லாம் சோஷலிசத்தின் அறிகுறிகளல்ல!"

அண்ணா பெயரை வைத்துக் கொண்டா இந்த அராஜகம்?

சென்னை, அக். 31—

"நேற்றுப் பேசிய எம்.ஜி.ஆர்., 7-ந் தேதிவரை தவணை வைத்திருக்கிறார்; யாருக்குத் தவணை -- எங்களுக்கா, உங்கள் ஆட்களுக்கா?

விருத்தாசலத்தில் மாவட்டச் செயலாளர் வீட்டைத் தாக்கச் சென்ற கூட்டம் யாருடையது?

திருத்தணியில் வேழவேந்தன் தாக்கப்பட்டார் -- அவரது கார் கொளுத்தப்பட்டது என்றால், அது எங்கள் கழகத்தின் செயலா?

போடியில் சுருளிவேலின் வீட்டைத் தாக்கச் சென்றது யார்?

கண்ணமங்கலத்தில் தோட்டூர் திருவேங்கடத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர் விசுவநாதத்தையும் போலீசு நிலையம்வரை சென்று தாக்கச் சென்றது யார்?

யாரோ செய்கிறார்கள்' என்றால், அவர்களைக் கண்டித்து அறிக்கை விட்டிருக்கலாமே -- என் செய்யவில்லை?

அண்ணா அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அப்படி அறிக்கை விட்டுக் கண்டித்தார்; அந்த வன்முறைகளைத் தடுத்தார்; அண்ணாவின் பெயரை வைத்துக் கொண்டிருக்கின்ற நீங்கள் என் இதைச் செய்யவில்லை?"

--பேராசிரியர் க. அன்பழகன்

(வடசென்னைக் கூட்டத்தில்)

காமராசருக்கு கிடைத்திருக்கும் புதிய பேச்சாளர்!

சென்னை, அக். 31—

'சொத்துக் கணக்குக் காட்ட வேண்டும்; அதற்கு நீதிபதி விசாரணை தேவை என்கிறார் -- எம்.ஜி ஆர்.; அவருக்கு உள்ளபடியே நீதிபதி விசாரிக்க வேண்டும் என்றிருந்தால், 'இன்னார் இன்ன தவறு செய்தார் -- இப்படிச் சொத்துச் சேர்த்தார்' என்று பகிரங்கமாகப் பேசுங்கள்; உடனே அவர் வழக்குத் தொடுப்பார் -- அங்கே நீதிபதி இருப்பார் -- விசாரணை நடக்கும்; இதற்கென்று என் தனி நீதிபதி -- நீதிபதிகள்தான் இருக்கிறார்களே!

'தவறு செய்துவிட்டவர் பெயரைச் சொல்லி -- அவர்மீது குற்றம் சாட்டிப் பேசுங்கள்; நீதிபதி விசாரணை உடனே தொடங்கிவிடும்!

"எங்கள் தயவு தேவையில்லை; நீதிபதியை நாங்கள் நியமிக்க வேண்டிய அவசியமும் இல்லை!

"அப்படிச் செய்யாமல், பொதுவாக, 'ஊழல் ஊழல்' என்றால், இது காமராசர் சொன்னதுதானே? நீங்களும் அப்படியே சொன்னால், 'காமராசருக்குக் கிடைத்த புதிய பேச்சாளர்' என்றுதான் மக்கள் கருதுவார்கள்!"

---பேராசிரியர் க. அன்பழகன்

(வடசென்னைக் கூட்டத்தில்)

நீதி -- நேர்மை -- நியாயம் நம் பக்கம்

அண்ணா பெயரைச் சொல்லி நம் கழகத்தையே அழிக்கத் துணிந்திருக்கின்றார்கள்

பதவியை எதிர்பார்த்து ஏமாந்த எரிச்சலால் எதிரிகளுக்குத் துணை போகிறார்கள்

புதுக் கட்சி ஸ்தாபகரின் புதிய கோலம் -- அம்பலப்படுத்துகிறார் பேராசிரியர் க. அன்பழகன்

மதுரை, அக். 28—

"தி. மு. கழகத்தை யார் யாரோ அழிக்க முயற்சி செய்து ஏமாந்தார்கள்; இப்போது புரட்சி நடிகர் முயற்சி செய்கிறார்; அண்ணாவின் பெயரை வைத்து முயற்சிக்கிறார்; ஆனால் தி. மு. கழகம், அவர் தொடங்கியிருக்கின்ற கட்சியால் அழிந்து விடுமேயானால், அதைவிட பெரும் அதிர்ச்சி வேறொன்றும் எங்களுக்கு இல்லை!

"இன்றைக்கு இருக்கின்ற இயக்கம், அறிஞர் அண்ணாவின் உடம்பாக இருக்கின்ற இயக்கம்; அவரது உயிர்தான் தி.மு.க. -- அவரது பேச்சே தி. மு. கழகம்; அப்படிப்பட்ட தி. மு. கழகத்தை, 'அண்ணா தி.மு.க.' என்று ஒரு கட்சி தொடங்கி -- கழகக் கொடியைப்போல் ஒரு கொடியைத் தோற்றுவித்து அழித்துவிடுவார்களேயானால், மக்கள் ஏமாறமாட்டார்கள் -- புரட்சி நடிகர்தான் ஏமாறுவார்! அது நிச்சயம்!

'நியாயம் -- நீதி -- நேர்மை நம் பக்கம்; அண்ணாவின் உயிர் -- மூச்சு நம்மோடு; அண்ணாவின் கொள்கை நம்மோடு! அண்ணா ஒரு காலத்திலே நடித்தார் -- ஆனால் அவர் பூசிய பவுடர் புரட்சி நடிகரோடு; ஆகவே, அந்தப் பவுடருக்காக மனிதன் மாய்ந்துவிடமாட்டான் -- தன் இலட்சியத்தை விட்டுவிட மாட்டான்!

"ஆகவே, தமிழ் மக்கள் எங்களது விளக்கங்களைக் கேட்டு -- தி. மு. கழகத்தைக் கட்டிக்காப்பாற்றி -- கலைஞரின் ஆட்சியை வலுப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்"

—என்று, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், மதுரையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்; அவரது உரையில் மேலும் கூறியதாவது:—

"தமிழ்நாட்டு மக்களைக் கணக்குக் கேட்கின்ற அளவுக்குப் புரட்சி நடிகரின் தியாகம் இந்த நாட்டில் உயர்ந்துவிடவில்லை; இன்றையத் தினம் அவர் ஒரு சாதாரண கிளைக் கழகச் செயலாளரிடமும் சொத்துக் கணக்கு கேட்கிறார்; அப்படி ஒரு பழக்கம் உலகத்திலே எந்த அரசியல் கட்சியிடமாவது இருக்கிறதா என்பதை அவர் கேட்டறிந்திருக்கிறாரா? காங்கிரசில் உண்டா -- வேறு எந்தக் கட்சியிலாவது உண்டா? அப்படி என்ன இவருக்கு அவசியம் வந்துவிட்டது கூட்டத்தில் அப்படிப் பேச! திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட்டு விலகிச் சென்றுவிட்டபின் பேசக்கூடிய பிரச்சினையாக இருக்கட்டும் என்ற அளவில் இப்படியெல்லாம் பழி சுமத்திப் பேசுகிறாரா?

அப்படி அவர் கேட்ட பிறகு, 'திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுவிலே கணக்கு வைக்கப்பட்டு -- பொதுக்குழு ஒப்புக்கொண்டிருக்கிறதே; நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்' என்று நிருபர்கள் அவரைக் கேட்டபோது, 'அது கட்சிக் கணக்கு; நான் கேட்டது அத்தனை பேரின் சொத்துக் கணக்கு' என்று பதில் சொல்லியிருக்கிறார்.

எந்தக் கட்சியிலும், கட்சிக் கணக்கைத்தான் வைப்பார்கள்; வேறெந்த மாநிலத்திலும் இல்லாத முறையில், தமிழகச் சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் சொத்துக் கணக்கும் -- அமைச்சர்கள் செலவுக் கணக்கும் வைக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில், 'உறுப்பினர்கள் அனைவரும் சொத்துக் கணக்கு வைக்க வேண்டும்' என்று தீர்மானம் வந்தபோது, தலைமையமைச்சர் இந்திராகாந்தி, 'சொத்துக் கணக்கு வைக்க வேண்டும் என்று வலியுறுத்துவதும் -- முறை ஏற்படுத்துவதும் அவசியமில்லை எனக் கருதுகிறேன்' என்றார்; இன்றைக்கு அந்த இந்திரா காந்திதான், உலகத்துக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கிறார் -- புரட்சி நடிகர் படத்தில்!

'சொத்துக் கணக்குப் பற்றி யாரிடமிருந்தாவது புகார் கடிதம் வந்திருக்கிறதா' என்று அவரிடம் கேட்டால் 'வரவில்லை' என்று பதில் கூறுகிறார்; புரட்சி நடிகரின் ரசிகர்கள், அவர் கூறுகின்ற பதிலைப் படித்துப் பார்க்கட்டும்; படித்துப் பார்த்தபின், அவர் கூறுவதில் நியாயம் இருக்கிறதா என்று அறிந்துகொண்டு அவரை ஆதரித்தும் பின் தொடர்ந்து செல்லட்டும்!

அவர் பின்னால் யாரும் போகவேண்டாம் என்று கூறுகின்ற எண்ணம் எங்களுக்கு இல்லை; 'அவர் கூறுவதில் நியாயம் இருக்கிறது' என்று யார் யார் கருதுகிறார்களோ -- 'அவரால் ஓர் இயக்கத்தைக் கட்டிக் காத்து நடத்த முடியும்' என்று யார் யார் கருதுகிறார்களோ அவர்கள் அவர் பின்னால் போகட்டும்!

'புகார்க் கடிதம் வரவில்லை' என்று பதிலளித்த அவரிடமே நிருபர்கள், 'உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா -- குற்றஞ்சாட்டுகிறீர்களா? என்று கேட்டபோது, 'எனக்கு யார்மீதும் சந்தேகம் இல்லை; எந்தத் தலைவர் மீதும் குற்றஞ்சாட்டவில்லை' எனப் பதில் கூறியிருக்கிறார்.

ஆக -- எந்தத் தலைவர்மீதும் குற்றச்சாட்டு இல்லை; யார்மீதும் சந்தேகம் அவருக்கு இல்லை; யார்மீதும் குற்றச்சாட்டுக் கூறிப் புகார்க் கடிதம் வந்ததாகக் கூறவும் இல்லை; ஆனால், 'பொதுவாகத் தி.மு.க. மீது சந்தேகம் இருக்கிறது' என்று கூறுகிறார்; இதுதானா தி. மு. கழகத்துக்கு எம்.ஜி.ஆர். செய்கின்ற நன்மை?

கட்சியின் பொருளாளராக நியமிக்கப்பட்ட ஒருவர், கலைஞருக்கு -- நாவலருக்கும் பக்கத்தில் உட்கார வைக்கப்பட்ட ஒருவர், இந்தக் கட்டத்துக்கு ஏன் வந்தார் -- எப்படி வரமுடியும் அவரால்?

இந்த இயக்கத்திலே இருக்கின்ற சாதாரணத் தொண்டர்களின் தியாகத்தைவிடவா புரட்சி நடிகரின் தியாக வரலாறு அமைந்திருக்கிறது? ஒரு சாதாரணத் தொண்டன் செய்த தியாகத்தைக்கூடப் புரட்சி நடிகர் செய்ததில்லை; அப்படிப்பட்ட அவர் சொல்கிறார் -- 'தி.மு.க. என்றால் நானேதான்' என்று.

அறிஞர் அண்ணா சொல்லியிருக்கிறார் -- 'நான்' என்று பேசாதே தம்பி; 'நாம்' என்று கூறு; 'நாம்' என்று கூறினால், உன்னைத்தான் பெரியவனாக எண்ணுகின்ற மனப்பான்மை வரும்; ஆகவே, 'நாம்' என்றுதான் நான் பேசுவேன்' என்று!

ஒருமுறை அண்ணா சொன்னார் -- 'அண்ணாதுரை இந்த இயக்கத்தை வளர்த்திருக்கிறான் என்று சொன்னால், 'ஒரு மாபெரும் குடும்பத்தை உருவாக்குகிற உணர்ச்சியிலே நான் கலந்து வளர்ந்திருக்கிறேன்' என்பதாகும்; 'காஞ்சிபுரத்திலே பிறந்த நானும் -- திருச்சியிலே பிறந்த ராபியும் அண்ணன் தம்பியாக இருக்கிறோம் என்று சொன்னால், அது தி மு. [illegible] சேர்த்த பாசம்; அந்தப் பாசத்திலே வளர்ந்திருக்கின்ற [illegible] சகோதரர்கள் என்பதாகும்' என்று குறிப்பிட்டார்.

இன்னுமொருமுறை சொன்னார் -- 'என்னுடைய உணர்ச்சியைத் தம்பி கருணாநிதியினுடைய பேச்சிலே கேளுங்கள்; என்னுடைய நல்ல தமிழை நாவலருடைய உரையிலே கேளுங்கள்; என்னுடைய கருத்து விளக்கத்தை அன்பழகன் பேசுகிறபோது கேளுங்கள்; என்னுடைய நகைச்சுவையை சி. பி. சி.-யின் உரையிலே கேளுங்கள்; இப்படி என்னைத்தான் பலருடைய வடிவத்திலே பார்க்கிறீர்கள்; பலருடைய வடிவத்தைத்தான் நானாகக் காண்கிறீர்கள்' என்று கூறினார்.

அந்த அறிஞர் அண்ணா எங்கே -- இவர் எங்கே? அந்த அறிஞர் அண்ணாவினிடத்திலே வளர்ந்த புரட்சி நடிகர், இன்று, 'நானேதான் தி. மு. கழகம்' என்கிறாரே!

எம். ஜி. ஆரின் அரசியல் பிரச்னையை மட்டுமே அனுபவிப்பாருங்கள்; ஒரு பெரிய போராட்டம் தமிழ்நாட்டில் நடைபெற்றபோது கோவாவில் இருந்தார் அவர்!

அறிஞர் அண்ணா அவர்களும் -- நாங்களும், 1962-லே பன்னிரண்டு போராட்டங்களிலே -- விலைவாசிப் போராட்டங்களிலே கலந்து கொண்டபோது, 'நடிகர்களெல்லாம் போராட்டம் என்றால் தாங்கமாட்டார்கள்' என்று கருதி ஒரு நடிகருக்காக 'நடிகர்கள் -- டாக்டர்கள் -- எஞ்சினீயர்கள், வழக்கறிஞர்கள் -- அரசாங்க ஊழியர்கள் போன்றவர்களும் போராட்டங்களிலே விதிவிலக்கு' என்று ஒரு தீர்மானமே கொண்டு வந்தார்கள்; அதனைப் பயன்படுத்தி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது புரட்சிநடிகர் கோவாவில் இருந்தார்; இன்னொரு போராட்டத்தின்போது மைசூர்ப் பகுதியிலே இருந்தார்.

எம். ஜி. ஆர். மீது பற்றுள்ளவர்கள் -- இன்னும் பற்று வைத்திருப்பவர்கள், இதுவரையில் புரட்சிநடிகர் எந்தப் போராட்டத்துக்குத் தலைமை வகித்தார் என்று கூறமுடியுமா?

நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டுகின்ற போராட்டம் -- அதிலே இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். கலந்து கொண்டாரே தவிர, புரட்சிநடிகர் கலந்து கொள்ளவில்லை!

இந்தி எதிர்ப்புப் போராட்டம் மூன்று முறை நடத்தினோம்; சிறை சென்றோம்; ஆனால் புரட்சி நடிகர் அதிலே இடம்பெறவில்லை! விலைவாசிப் போராட்டத்திலும் அவ்வாறே; அது மட்டுமல்ல -- தோழர் இராஜாங்கத்தைப் போல சிறையிலே வாடியவர்களைக்கூட அவர் சிறைக்கு வந்து பார்த்ததில்லை!

இப்படியிருக்கின்ற அவருக்குத் தி. மு. கழகத்தைக் குற்றஞ்சாட்டி என்ன யோக்கியதை இருக்கிறது? இந்த இயக்கத்துக்காக தியாகம் பல செய்தவர்கள் இங்கு ஒரு வரிசையில் இருக்கும்போது, திரைப்படத் துறையிலே இருந்த எம். ஜி. ஆர். குற்றஞ் சாட்டலாமா?

அவரது ஆணவப்போக்கு பற்றி இன்னொன்றையும் கூறுகிறேன்; 1971 தேர்தல் முடிவுகள் வெளியானபோது அவர் காஷ்மீரில் இருந்தார்; முடிவுகள் வெளியான விவரங்களைக் கேட்டுப் புதுடில்லிக்கு வந்து 'டிரங்கால்' மூலம் கலைஞரை அழைத்து, 'வெற்றிச் செய்தியைப் பார்த்தேன்; நான் வந்த பிறகு அமைச்சரவை அமைக்கலாம்' என்று கூறினார்; அதற்குக் கலைஞர், நாளையே கவர்னரிடம் அமைச்சரவைப் பட்டியல் அளிக்கவேண்டும்; நேரமும் இல்லை; எனவே, உங்களுக்காகத் தாமதிப்பது இயலாது' என எடுத்துரைத்தார்; ஆனால் புரட்சி நடிகர், இல்லை, இல்லை -- பொறுத்திருங்கள்' என்றார்; 'அதுவரைப் பொறுத்திருந்தால் கவர்னர் நம்மைத் தவறாக நினைப்பார்கள்' என்று சொன்னார் கலைஞர்; 'அப்படியானால், என்னுடைய இடத்தை மட்டும் விட்டு விட்டு மற்றதையெல்லாம் கொடுங்கள்' என்றார்; கலைஞருக்குத் தூக்கி வாரிப்போட்டது!

கலைஞர் சொன்னார் -- 'மூளிப் பட்டியலாகக் கொண்டுபோகக்கூடாது; முழுப் பட்டியல்தான் கொண்டு போகவேண்டும்' என்று; அதற்கு அவர், 'உங்களுக்கு உரிய பங்கு எனக்குக் கிடையாதா' என்றார்; 'உங்களுக்குப் பங்கு உண்டு; எங்களுக்கு உள்ள பெருமை அனைத்தும் உண்டு; எங்களோடு சேர்ந்து நீங்களும் பணியாற்றுங்கள்; ஆனால் உங்களை அமைச்சராக்குவதற்குச் சட்டம் இடம் தராது' என்றார் கலைஞர்; 'அது என்ன சட்டம் -- எனக்கில்லாத சட்டம் என்றார்' அவர்!

மறுநாள் புரட்சி நடிகர் வந்தார்; நாவலரிடம் சென்று பேசினார்; நாவலர், 'ஒரு தொழிலைச் செய்துகொண்டு அமைச்சராக இருக்கக்கூடாது' என்று விளக்கி, 'அதுதான் சட்டம்' என்றார்; 'அப்படிப்பட்ட சட்டத்தை மாற்ற முடியாதா' என்று கேட்டார் புரட்சி நடிகர்; 'அதற்கு மாநில சுயாட்சி பெறவேண்டும்' என்று கூறினார் நாவலர்.

'அமைச்சராக்குவதற்குச் சட்டத்தை மாற்றவேண்டும்' என்பது, நேரு காலத்திலிருந்து இன்றுவரையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பாரம்பரியம்; அதை மாற்றுவது என்பது நல்லதல்ல; நம்மைத் தவறாக நினைப்பார்கள்' என்றார் கலைஞர்; அப்போதுதான் அவரது உள்ளத்திலே ஆற்றாமை -- எரிச்சல் ஏற்பட்டிருக்கிறது!

'புரட்சி நடிகர் இப்படிக் கேட்கிறாரே -- என்ன செய்வது' என்று கலைஞர் என்னைக் கேட்டபோது, 'தனிப்பட்ட ஒருவருக்காக ஒவ்வொன்றையும் மாற்றுவது என்பது சங்கடம் என்பது என் கருத்து' என்று சொன்னேன்; இந்த ஏக்கத்திலேயே -- ஏமாந்த நிலையிலே புரட்சி நடிகர் இருந்து வந்திருக்கிறார்!

சில காலத்துக்குமுன் யாரிடமோ அவர், 'தமிழகத்திலே தி.மு.க. ஆட்சி மீண்டும் வருமேயானால், அது என் தயவிலேதான் நடக்கும்' என்று கூறியிருக்கிறார்; ஆனால், கலைஞரின் தயவால் நடக்காதாம்; ஏதோ தி. மு. கழக அமைச்சரவை ஒரு காலத்திலே தூக்கியெறியப்பட்டு -- புரட்சி நடிகரின் தயவாலே அமைக்கப்படுமாம்!

அந்த அளவுக்கு அவரது மனப்பான்மை வளர்ந்திருக்கிறது என்று கூறினால், 'அவர் நியாயத்தை ஏற்றுக் கொள்வாரா -- நல்லெண்ணத்துடன் நடப்பாரா' என்று எண்ணிப் பாருங்கள்!

இதை உணராமல் எம். ஜி. ஆர். ரசிகர்கள் எங்கள்மீது ஆத்திரப்படுவதைக் காணும்போது, அவர்களை நான் கோபித்துக் கொள்வதில் பயனில்லை; அவர்கள் மீது அனுதாபம்தான் பிறக்கிறது; அவர்களுக்காக நான் வருத்தப்படுகிறேன்; அரசியல்வாதிகளுக்கே சில நேரங்களில் அறிவு தடுமாறுகின்றபோது, ரசிகர்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை!"

வங்க தேசத்தில் கள்ளக்கடத்தல்

5,834 பேர் கைது

டாக்கா, அக். 31—

கள்ளக்கடத்தல் செய்ததாக இதுவரையில் 5,834 பேர்களை வங்காள தேசத் துருப்புகள் கைது செய்துள்ளனர்; 7,50,000 டாக்கா மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

ஒரே மாதத்தில் ரூ. 7.50 இலட்சம்

சென்னையில் பிடிபட்ட கள்ளக்கடத்தல் சரக்கு

கடந்த செப்டம்பர் மாதத்தில் மட்டும் சென்னை சுங்கத்துறை அதிகாரிகள், ரூ. 7.50 இலட்சம் மதிப்புள்ள கள்ளக்கடத்தல் பொருள்களைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

இதன் தொடர்பாக 9 பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்; வேறு நான்கு பேர்களுக்கு நீதிமன்றத்தில் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

மத்திய அரசிடம் பட்டுள்ள கடன்கள்

திருப்பிச் செலுத்துவதில் உள்ள இடர்ப்பாடுகள்

டில்லியிடம் மாநில அரசு கோரிக்கை -- கலைஞர் விளக்கம்

தஞ்சாவூர், அக். 27—

"தமிழக அரசுக்கு வழங்கியுள்ள கடன்களைப் பற்றி பிரச்சினையில் மத்திய அரசு தாராளமாக நடந்துகொள்ள வேண்டும் -- இயலக்கூடிய இடங்களில் அவற்றை மானியங்களாக மாற்ற வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

"மாநிலங்களுக்கு அளித்த கடன்களைத் திருப்பித் தருவதற்கான காலக்கெடுவை நீடிக்கும்படியும் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாயூரத்தில் காவிரி நதி மீது கட்டப்பட்டுள்ள புதிய பாலம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

மாநில அரசிடமிருந்து வாங்கிய கடன்களைப் பல உள்ளாட்சிகளால் திருப்பித்தர இயலவில்லை; இத்தகைய கடன்களை மானியங்களாக மாற்றவேண்டும் என்று அரசை அவைகள் கேட்டுக் கொண்டிருக்கின்றன; அவைகளின் சிரமங்களை அரசு உணர்ந்திருக்கிறது; இதேபோல மத்திய அரசும் தாராளமாக நடந்துகொண்டு மாநிலங்களுக்கு அளித்த கடன்களை மானியமாக மாற்றவேண்டும்.

முதலில் குறிப்பிடப்பட்ட செலவுத் தொகைக்குள் பொதுப்பணித் துறை வேலைகளை உள்ளாட்சிகள் நிறைவுசெய்ய வேண்டும்; செலவு மதிப்பீட்டுக்கு அதிகமாகச் செலவிடக் கூடாது."

செங்கோட்டை நெசவாலை

இந்திய அரசு ஏற்கும்

புதுடில்லி, அக். 31—

தமிழ்நாட்டிலுள்ள செங்கோட்டையில் இருக்கும் பருத்தித் துணி ஆலையின் நிர்வாகத்தை, தொழில் வளர்ச்சி -- ஒழுங்குக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்வது என்று இந்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

தொழில் நுட்ப பட்டதாரிகட்குச் செயல் முறைப் பயிற்சி

இந்திய அரசு ஆதரவிலான 1972–73-ம் ஆண்டுக்கான செயல்முறைப் பயிற்சி உதவிப் பணத் திட்டத்தில் சேர விருப்பமுடைய பொறியியல் -- தொழில் நுட்பப் பட்டதாரிகளும், இத்துறைகளில் டிப்ளமா பெற்றவர்களும் சென்னை தென் வட்டாரத் தொழிற் பயிற்சிக் கல்வி வாரியத்துக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும்; பட்டதாரிகட்கு மாதம் ரூ. 250 வீதமும், டிப்ளமா பெற்றவர்கட்கு மாதம் ரூ 150 வீதமும் உதவிப் பணமாக அளிக்கப்படும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் -- மலைசாதியினருக்கும், இட ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன; இதற்கு முன்னரே விண்ணப்பித்திருந்தும், பயிற்சியில் சேருவதற்குத் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் இப்போது மீண்டும் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

நிரப்பப்பட்ட விவரங்களுடன் கூடிய விண்ணப்பங்கள், 'இயக்குநர், தென் வட்டாரத் தொழிற் பயிற்சிக் கல்வி வாரியம், எண்-17, ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-6' என்ற முகவரிக்கு நவம்பர் 15-ந் தேதிக்குமுன் அனுப்பி வைக்க வேண்டும்.

அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டப் பணம்

வரம்பை உயர்த்தி அரசு உத்தரவு

சென்னை, அக் 31—

தமிழ் நாட்டில் பணியாற்றும் மாநில அரசு ஊழியர்கள் -- அகில இந்திய சர்விசு அதிகாரிகள் ஆகியோருக்கு வீடு கட்டுவதற்காக அளிக்கப்படும் முன்பணத்தொகையின் அதிகபட்ச வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

இதுவரையில் ஓர் ஊழியரின் 45 மாத சம்பளத் தொகை அல்லது ரூ. 45,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகையே அதிகபட்ச முன்பணமாக வழங்கப்பட்டு வந்தது; இப்போது, ஓர் ஊழியரின் 60 மாதச் சம்பளத் தொகை அல்லது ரூ 55,000 ஆகியவற்றில் எது குறைவான தொகையோ அந்தத் தொகை அதிகபட்ச முன்பணமாக வழங்கும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

ஓர் ஊழியருக்கு வீடு கட்டும் முன்பணம் எவ்வளவு தரவேண்டும் என்பதை, அவரது சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதி பஞ்சப்படியைகூட்டித் தொகையைக் கணக்கிட்டு -- அதற்கேற்ற விதத்தில் இதுவரையில் நிர்ணயிக்கப்பட்டு வந்தது; இப்போது ஓர் ஊழியரின் சம்பளத்தில் நான்கில் ஒரு பகுதியுடன் பஞ்சப்படியின் கூட்டுத் தொகைக்கு ஏற்றவிதத்தில் முன்பணத் தொகையை நிர்ணயிக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

கைத்தறியாளர்கட்குக் கழக அரசு அளித்துவரும் உதவி

சேலத்தில் விற்பனையைத் தொடங்கி வைத்து முதல்வர் கலைஞர் விளக்கம்

சேலம், அக். 30—

"ஒரே ஒரு நாள் கைத்தறித் துணி விற்பதால் நெசவாளர் துயர் நீங்கிவிடுமா என்றால் நீங்காததுதான், வாங்குவோர் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் -- நெசவாளரை ஊக்கப்படுத்தவும் -- உற்சாகப்படுத்தவுமான முயற்சிதான் இது; இதற்காகவே, 'சந்தானம் குழு' என்ற ஒன்றையும் அமைத்திருக்கிறோம்; அதன் அறிக்கையும் விரைவில் தரப்பட வேண்டுமெனக் கேட்கப்பட்டிருக்கிறது, நெசவாளர் மேலும் மேலும் உயர்வு எய்திடப் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு பெரிதும் உதவும் என உறுதி அளிக்கிறேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சேலம் -- அம்மாப்பேட்டை -- பட்டைக்கோயில் -- குகை -- தாதகாப்பட்டி -- செவ்வாய்ப்பேட்டை -- தேவாங்கபுரம் -- அரிசிப்பாளையம் ஆகிய ஊர்களில், கைத்தறித் துணி விற்பனையைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டார்; இத்தொடர்பில் அவர் விளக்கிக் கூறியதாவது:—

"சேலம் மாவட்டம் கைத்தறிக்குப் பெயர் பெற்ற மாவட்டமாகும்; இங்கும், மற்ற இடங்களிலும் கழகத்தவர் கைத்தறித் துணி விற்பதென்பது புதிதாக நடப்பதல்ல! தி. மு. கழகம் ஆளும் கட்சியான பிறகுதான் நடக்கிறது என்பதில்லை -- எதிர்க்கட்சியாக இருந்தபோதும் 1953-ல் கைத்தறித் துணி விற்பனையில் நாம் ஈடுபட்டோம்!

1952—53-ல் நெசவுத் தொழில் உற்பத்தி பெருகி -- கைத்தறித் துணிகள் வாங்குவாரின்றித் தேங்கின; அதனால் பேரறிஞர் அண்ணா அவர்கள், நாம் கைத்தறித் துணி விற்பனை செய்ய வேண்டுமெனக் கூறினார்; அப்போது நாம் கைத்தறித் துணி விற்பனை செய்தோம்.

அப்போது ஆளும் கட்சியினராக இருந்த காங்கிரசாரும் அதற்காக நம்மைப் பாராட்டினார்கள்; எல்லா ஏடுகளுமே பாராட்டி எழுதின!

கழக அரசு இயன்ற வழிகளிலெல்லாம் நெசவாளருக்கு உதவி வருவதனை நீங்கள் நன்கறிவீர்கள்.

சேலத்தில் நெசவாளருக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டபோது, அமைச்சர் மாதவன் அவர்களே வந்து நெசவாளர் பிரதிநிதிகளைச் சந்தித்து -- நெசவாளருக்காக இந்த அரசு செய்துள்ள உதவிகளையும், நிறைவேற்றவிருக்கிற திட்டங்களையும் பற்றி விளக்கிப் பேசிவிட்டு வந்தார்.

பிரதமச் சங்கத்திற்கும் -- மாநில சங்கத்திற்கும் ரிசர்வ் வங்கியிடம் உத்தரவாதம் அளித்து அதன் மூலம் கடன் பெற்றுத் தந்திருக்கிறோம்; 1967-ல், ரூ. 460 இலட்சம் அப்படி பெற்றுத் தரப்பட்டது; 1972–73 ல் அது ரூ. 800 இலட்சமாக வளர்ந்திருக்கிறது.

ஆண்டுதோறும் தமிழக அரசு அளித்துவரும் உதவித் தொகையைப் பார்த்தால், அது 1967-ல் ஒரு கோடியாக இருந்தது; 1972—73 ல் அது இரண்டரைக் கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

கைத்தறியில் நவீன முறை நெசவுப் பயிற்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன; 1966–67-ல் ரூ. 1.41 இலட்சமும், 1967—68-ல் ரூ. 1.57 இலட்சமும், 1971—72-ல் ரூ. 5.19 இலட்சமும் இப்பயிற்சிக்காக அரசு வழங்கியிருக்கிறது.

தள்ளுபடி அளிப்பதன் மூலம் கைத்தறித் துணியின் உற்பத்தி பெருகவும் -- அந்தத் துணி வெகுவாகச் சந்தைக்குச் செல்ல வசதி ஏற்படுத்தவும் அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

1967—68 ல் தள்ளுபடி அளிக்கப்பட்ட நாட்கள் 52; 1968–69-ல் 89 நாட்கள்; 1969—70-ல் 69 நாட்கள்; 1970–71-ல் 68 நாட்கள்; 1971–72 ல் 85 நாட்கள்; இவ்வாறு தள்ளுபடி தரப்படும் நாட்களும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

தள்ளுபடிக்காக அளிக்கப்படும் உதவித் தொகை 1967—68-ல், இருந்த ரூ. 64 இலட்சம், 1971—72-ல் ரூ. 130 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

மத்திய அரசும் இவ்வகையிலே நமக்கு உதவி செய்வதாக உறுதி அளித்திருக்கிறது; அந்த உதவியைப் பெற வாதாடிப் போராடி முயன்று வருகிறோம் நாம்!"

இருபது ஆண்டுகட்குமுன் அண்ணா துவக்கிய பணி

கைத்தறி துணிக்கு நல்லாதரவு கிட்ட வழிவகுத்தது

பொதுச்செயலாளர் நாவலர் விளக்கம்

மதுரை, அக். 30—

"கைத்தறி ஆடை வாங்காமல் ஆலைத் துணியை மட்டும் வாங்குகின்ற பழக்கம் நம்முடைய மக்களிடம் இருக்கின்ற காரணத்தால்தான், கைத்தறித் துணி அதிகமாகத் தேங்குகிறது.

"இந்த நிலையை மாற்றத்தான் இதுபோன்ற விற்பனையில் நாங்கள் ஈடுபட்டோம்; இந்த உணர்ச்சி மக்களிடம் பரவிக் கைத்தறி ஆடை நாட்டில் தேங்காமல் விற்பனையாகின்ற சூழ்நிலை வளர வேண்டும்"

என்று தி.மு.க. பொதுச்செயலாளரும் -- கல்வியமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மதுரை நகரில் கைத்தறித் துணி விற்பனையைத் துவக்கிவைத்துப் பேசுகையில் வலியுறுத்தினார்; அவர் மேலும் கூறியதாவது:—

"தி. மு. கழகப் பொதுக்குழு எடுத்த முடிவிற்கிணங்க கைத்தறித் துணி விற்பனைக்கு ஆக்கமும் -- ஊக்கமும் தரவேண்டி இந்த நாளை எடுத்துக்காட்டால், ஒரு நாளாக -- வேண்டுகோள் விடுக்கின்ற நாளாக -- 'பொறுப்பை உணர்த்திக் கடமையை ஆற்ற வேண்டும் என்ற நாளாக அமைய வேண்டும்' என்று கருதி இந்த நாளைத் தேர்ந்தெடுத்தோம்.

நாட்டிலே இரு பெரும் தொழில்கள் உண்டு; ஒன்று நெசவுத் தொழில் -- மற்றது வேளாண்மைத் தொழில்; இவ்விரண்டு தொழிலும்தான் என்றைக்கும் காப்பாற்றப்பட வேண்டிய தொழில்களாக இருக்கின்றன.

வேளாண்மைத் தொழிலை மட்டும் நம்பி வாழ்கின்ற மக்கள் 100-க்கு 70 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள்.

தமிழகத்தில் மட்டும் ஐந்தரை இலட்சம் கைத்தறிகள் உள்ளன; அதை நம்பி வாழ்கின்ற மக்கள் 20 இலட்சம் பேர் இருக்கிறார்கள்; அவர்கள் உழைப்பின்மூலம் நெய்து தருகின்ற துணிகள் அத்தனையும் அடுத்தடுத்து விலை போகின்ற சூழ்நிலை ஏற்பட்டால்தான் இதை நம்பி வாழ்கின்ற 20 இலட்சம் [illegible] வாழ்வு செழிப்பாகும் என்று கருதி இதற்கு ஆக்கம் தரவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

நம்முடைய நாடு ஜப்பானைப் போல -- இரஷ்யாவைப்போல -- அமெரிக்காபோல -- ஜெர்மனியைப் போல் தொழில் துறையில் இன்னும் முன்னேறவேண்டும்; தொழில்நுட்பத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் எண்ணிக்கையும் மிக மிகக் குறைவு.

ஆலைகள் -- தொழிற்சாலைகள் பணிமனைகளில் தொழில் நுட்ப அறிவு பெற்றவர்கள் இந்தியாவில் உள்ள 56 கோடி மக்களில் 1 கோடிப் பேர்தான் தொழில் நுட்பம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள்.

20 ஆண்டுக் காலத்திற்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் இட்ட கட்டளைக்கு இணங்க நாடு முழுவதும் கைத்தறித் துணிக்கு நல்லாதரவு வேண்டுமென்று கருதி 'எல்லோரும் கைத்தறித் துணிகளையே கட்டவேண்டும்; அதற்கு ஆதரவு தந்தால்தான் நெசவாளர்களுடைய கண்ணீர் துடைக்கப்படும்' என்று கருதி -- ஒரு பெரிய இயக்கம் நடத்தப்பட்டு, ஓரளவுக்கு நல்லாதரவும் அதற்குக் கிடைத்தது.

எல்லோரும் கைத்தறி ஆடைகளையே கட்டுகின்ற வழக்கத்திற்குத் தங்களைத் தாங்களே உள்ளாக்கிக் கொள்ளவேண்டும்; அது மட்டுமல்லாமல், கூட்டங்களில் எல்லாம்கூட, மாலைகளுக்குப் பதிலாகக் கைத்தறி ஆடைகளைத் தரவேண்டும் என்ற வழக்கத்தையும் 20 ஆண்டுகளாகவே, வற்புறுத்தி வந்திருக்கிறோம்"

வெளிநாடுகளில் பணியாற்றும் தமிழக விஞ்ஞானிகள்

தமிழ் நாட்டுக்கும் தங்கள் பணியை நல்க வாய்ப்பு

சென்னை, அக். 31—

வெளிநாடுகளில் பணியாற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 30 அறிஞர்கள் விடுமுறைக் காலங்களில் தமிழ்நாட்டில் விஞ்ஞான -- தொழில் நுட்பத் துறைகளில் பணியாற்றுவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை, பத்திரிகைக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

1972–73-ம் ஆண்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்; இரு மாதங்களுக்கு ஒருமுறை இந்தத் திட்டம் செயல்பட்டு வருவதை ஆராய்வதற்காக ஓர் இணைப்புக் குழு அமைக்கப்படும்.

விடுமுறைகாலப் பேராசிரியர் வருகைத் திட்டத்தின்கீழ் வெளிநாடுகளில் பணியாற்றும் 20 தலைசிறந்த விஞ்ஞானிகள் தமிழ்நாட்டில் கல்லூரிகளில் விரிவுரை நிகழ்த்த அழைக்கப்படுவர்; இதற்கான செலவைத் தமிழ்நாடு அரசு ஏற்கும்.

எந்த எதிர்ப்பாலும் கழகம் அழியாது

கழகத்திற்காக இரத்தம் சிந்திய தோழர்கள் எங்கே—எந்தத் தியாகமும் செய்தறியாத எம். ஜி. ஆர். எங்கே?

சேலம் பொதுக்கூட்டத்தில் கலைஞர் முழக்கம்

சேலம் அக். 31—

திராவிட முன்னேற்றக் கழகம் அருமையான தோட்டம்! இந்தத் தோட்டம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதுபோல் 'சித்திரச் சோலைகளே — உங்களைத் திருத்த இப்பாரினிலே; எத்தனை தோழர்கள் இரத்தம் சிந்தினரோ' என்று இரத்தம் சிந்தி உருவாக்கப்பட்டிருக்கிறது!

தி. மு. க. என்னும் தரு வளரவும்—ஏராளமான பறவைகள் இந்தத் தருவில் கூடு கட்டவும்—அவற்றிற்கு நிழல் தரவும் தக்க வகையில், இந்தத் தருவிற்காக இரத்தம் கொடுத்த தொண்டர்கள் ஏராளம் பேர்; எனவே, எந்த எதிர்ப்பாலும் இந்தத் தரு அசைந்துவிடாது"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், சேலத்தில் நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஜெயராமன் எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்றார். கூட்டத்திற்கு அமைச்சர் க. இராசாராம் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் திரு. ஆறுமுகம் எம்.எல்.ஏ., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி., முத்துச்சாமி எம்.பி. ஆகியோர் பேசினர்.

கலைஞருக்கு சேலம் மாவட்ட முஸ்லிம் லீக் கட்சி சார்பில் கைத்தறி ஆடையும், சேலம் மாவட்ட திராவிடக் கழகத்தின் சார்பில் ஆள் உயர மாலையும் அணிவிக்கப்பட்டன.

கண்ணொளி நிதிக்காக பாரி எனும் மாணவன் ரூ. 101 அன்பளிப்பு வழங்கினான்.

இறுதியில் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

"என்னைப் பொறுத்தமட்டில் மூன்று கோட்டையில் நான் இருந்திருக்கிறேன்; சேலம் கோட்டைப் பகுதியில் குடியிருந்திருக்கிறேன்; பாளையங்கோட்டையிலே சிறை இருந்திருக்கிறேன்; இப்போது செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலே இருக்கிறேன்.

1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தால் குருதி மழை பொழிந்து கொண்டிருந்தது; தமிழகமே பிணக்காடாக மாறிவிட்ட நேரம்; எட்டுப் பேர் தீக்குளித்து மொழி காக்கத் தங்களைத் தியாக வேள்வியில் அர்ப்பணித்துக் கொண்டார்கள்; அப்போதுதான் பாளையங்கோட்டையிலே தனிமைச் சிறையிலே நான் அடைக்கப்பட்டேன்; இதெல்லாம் என்னுடைய வரலாற்றிலே சில கீற்றுகள்தான்!

நாவலர் அவர்களின் வாழ்க்கையில் இதுபோல் எத்தனையோ இன்னல்களும் இடுக்கண்களும் நேர்ந்திருக்கின்றன — தியாகங்கள் பதிவாகியிருக்கின்றன!

பேராசிரியர் அவர்கள் வாழ்விலும் சரி — என். வி. நடராசன் அவர்களின் வாழ்விலும் சரி — சத்தியவாணிமுத்து அம்மையார் வாழ்விலும் சரி — ஈ. ஆர். கிருஷ்ணன் வாழ்விலும் சரி — இராசாராம் வாழ்விலும் சரி — இந்த இயக்கத்துக்காகத் தங்களை அவர்கள் அர்ப்பணித்துக்கொண்டபோது அவர்கள் சந்தித்த தியாகங்கள்; எவ்வளவோ உண்டு!

இதில் எந்தத் தியாகத்தைவிட எம். ஜி. ஆர். உயர்ந்த தியாகம் செய்திருக்கிறார்?

ஏதோ நாலைந்து எம்.எல்.ஏ.-க்கள் சென்றுவிட்டதாலேயே இந்தக் கழகம் அழிந்துவிடப் போகிறது என்று யாரும் நினைக்கத் தேவையில்லை.

அதைத் தெரிந்துதான் தமிழ்நாட்டு மக்கள், 184 பேரை கழகத்துக்குத் தந்திருக்கிறார்கள்.

உறவுமுறை புரிகிறதா?

"சென்னை 108-வது வட்டம் சி. ஐ. டி. நகரில் இந்திரா காங்கிரசுக் கமிட்டியைக் கலைத்துவிட்டு அதிலிருந்தவர்கள் அண்ணா தி. மு. கழகத்தில் சேர்ந்தனர். இத்தகவலை, 108-வது வட்ட இந்திரா காங்கிரசுக் கமிட்டிச் செயலாளராக இருந்த கே. வேணு தெரிவித்துள்ளார்."

—'நவமணி' 28—10—72

ஒட்டுக் காங்கிரசுக் கட்சிக்கும் — இந்திரா காங்கிரசுக் கட்சிக்கும் உள்ள 'உறவு முறை' புரிகிறதா?

தி. மு. கழகத்திலிருந்து விலகிச் சென்று ஒட்டுக் காங்கிரசில் சேர்ந்து வருவதாகவும், ஒட்டுக் காங்கிரசுக் கட்சிக் கிளை அமைத்து வருவதாகவும் கூறப்படுவதில் எந்த அளவு உண்மை இருக்கும் என்பதற்கு இந்தச் செய்தியே சான்று தரும்.

சிண்டிகேட் — இண்டிகேட் — கம்யூனிஸ்டு மற்றும் தி. மு. கழகத்துக்கு எதிரான முகாம்களில் இருப்பவர்களெல்லாம் புதுக் கட்சிக்கு இரவல் சரக்காகக் கொடுத்து உதவப்படுகிறார்கள் அல்லது இரவலாகப் பெறப்படுகிறார்கள் என்பதைத் தவிர உண்மை வேறு இல்லை.

நேற்றுவரை இந்திரா காங்கிரசுக் கட்சியில் இருந்துவந்தவர்கட்கு பேரறிஞர் அண்ணா அவர்கள்மீதும் — அண்ணாவின் கொள்கையின்மீதும் எந்த அளவுக்குப் பற்றும் பாசமும் இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அப்படிப்பட்டவர்களின் 'பேராதர'வைக் கொண்டுதான் புதுக் கட்சி ஸ்தாபகர், தி. மு. கழகத்தைப் பார்த்து நாளுக்கொரு 'சவால்' — வேளைக்கொரு 'அறைகூவல்' விடுத்துக் கொண்டிருக்கிறார்!

பாவம் — பரிதாபம்! இன்னும் ஒருமாத காலத்துக்குப்பின், புரட்சியார் எங்கேயோ — அவர் நம்பியுள்ள ஆதரவாளர்கள் எங்கேயோ!

பெரம்பலூர் வட்ட தி. மு. க. கூட்டம்

பெரம்பலூர் வட்ட தி. மு. க. கூட்டம், 1—11—72 பிற்பகல் 2 மணிக்கு துரைமங்கலம் பயணிகள் விடுதியில் மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் தலைமையில் நடைபெறும்; வட்டக் கழக உறுப்பினர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டத் துணைச் செயலாளர் ஏ. எம். இராமசாமி கேட்டுக்கொள்கிறார்.

'முஸ்லிம் லீக் தி.மு. கழகத்திற்கு பக்கபலமாக இருக்கும்'

கேரளக் கல்வியமைச்சர் முகமது கோயா அறிவிப்பு

கொச்சி, அக். 30—

தி. மு. கழகத்திலிருந்து எம். ஜி. ஆர். விலக்கப்பட்டது பற்றிக் கேரள மாநில கல்வி அமைச்சரும் — முஸ்லிம் லீக் செயற்குழு உறுப்பினருமான முகமது கோயா கருத்தறிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில் இருக்கும் முஸ்லிம் லீக், தி. மு. கழகத்திற்குத்தான் பக்கபலமாக இருக்கும்; கருணாநிதியின் பின்னால் இருந்து அவரது கரங்களை வலுப்படுத்தும்.

"என்னைப் பொறுத்தவரையில், தி. மு. கழகத்தில ஏற்பட்டிருக்கும் பிளவு தற்காலிகமாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] இதழ் வெளியிடப்படுகிறது.

கழகத்தின் பக்கமே கருநாடக தி. மு. க.

தலைமைக் கழக முடிவை வரவேற்று ஒருமனதான முடிவு

பெங்களூர், அக். 29—

கருநாடக தி. மு. க. கிளைகள், தனி நபர் விவகாரத்தில் தலைமைக் கழகம் எடுத்த முடிவை ஒருமனதாக ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றின.

இன்று காலை 10 மணியளவில் இங்கு அப்பாவு உயர்நிலைப் பள்ளியில் கருநாடக மாநில தி. மு. க. பொறுப்பாளர் எஸ். வி. பதி தலைமையில் நடந்த கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

கருநாடக மாநிலமெங்கணுமுள்ள தி. மு. க. கிளைகளைச் சார்ந்த நிர்வாகிகள் 300 பேருக்கு மேற்பட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தலைமைக் கழகத்தின் முடிவை விளக்கியும் — வரவேற்றும் எஸ். ஜே. உசேன், திராவிடமணி எம். எல்.ஏ., கி. சோழன் எம்.சி., எஸ். என். நாராயணன், இளஞ்சேரன் ஆகியோர் பேசினர்.

முடிவாகத் தலைமைக் கழகத்தின் நடவடிக்கையை வரவேற்று கையொலி செய்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மா. இராசாங்கம் எம்.பி., குப்பி வீரண்ணா ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெங்களூர் மாநகராட்சி தி. மு. க. கட்சிக் கூட்டமும் நடந்தது. கட்சி உறுப்பினர்கள் பத்துப் பேரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தலைமைக் கழக முடிவை அனைவரும் ஏகமனதாக ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றினர்.

தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் ஏ. ஆர். பெருமாள் உறுதி

'உறவு தொடரும்'

'உடன்பாட்டை மதிப்போம்'

'சோதனையும் வேதனையும் ஏற்பட்டாலும் தி.மு.கழகத்தைத் தொடர்ந்து ஆதரிப்போம்'

மதுரை, அக். 30—

"தி. மு. கழகத்துடன் பார்வர்டு பிளாக் கட்சி கொண்டிருக்கின்ற உறவு எப்போதும் நீடிக்கும்"

என்று தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் ஏ. ஆர். பெருமாள் தெரிவித்தார்; இத்தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அவர் கூறியிருப்பதாவது:—

"1971-ம் ஆண்டுத் தேர்தலின் போது பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் நானும் — மூக்கையாத் தேவரும், தி. மு. கழகத்தின் சார்பில் கலைஞரும் — நாவலரும் கையெழுத்திட்டுச் செய்து கொண்ட உடன்பாட்டின்படி, தி. மு. கழகத்துடனான உறவு தொடர்ந்து நீடிக்கும்; எந்தச் சூழ்நிலையிலும் — எந்தக் காரணம் கொண்டும் இந்த இரு கட்சிகளின் உறவும் துண்டிக்கப்பட முடியாத ஒன்றாகிவிடும்.

"இதயபூர்வமாகத் தேவர் புகழ் காத்து — தேவரை நம்பியிருக்கும் மக்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கின்ற கலைஞரைத் தவிர வேறு யாரையும் தேவரின் தொண்டர்கள் நம்ப மாட்டார்கள்.

'எவ்வளவுதான் சோதனையும் வேதனையும் ஏற்பட்டாலும், தி. மு. கழகத்தைத் தொடர்ந்து ஆதரிப்போம் — கலைஞரின் கரத்தை வலுப்படுத்துவோம்."

சீக்கியர் தலைவர் பதே சிங் மறைவு

முதல்வர் கலைஞர் இரங்கல் செய்தி

அமிர்தசரஸ், அக். 31—

அகாலி தலைவர் சாந்த் பதே சிங், நேற்று மாரடைப்பால் மரணமடைந்தார்.

மருத்துவமனையில் அவருக்கு உரிய சிகிச்சைகள் செய்தும் பலன் எதுவும் ஏற்படாமலே அவரது உயிர் பிரிந்துவிட்டது.

சாந்த் பதே சிங் மறைவு குறித்து முதலமைச்சர் கலைஞர் தமது இரங்கலை தந்தி மூலம் பஞ்சாப் முதல்வருக்கு அனுப்பியுள்ளார்; அச்செய்தி வருமாறு:—

"அகாலி தளத் தலைவர் சாந்த் பதே சிங் மறைந்தார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன்.

"சாந்த் பதே சிங்கின் மறைவு மூலம் சிறுபான்மையினர் நலன் கோரும் போராட்ட வீரர் ஒருவரை — மனிதாபிமான ஊழியர் ஒருவரை இந்த நாடு இழந்துவிட்டது.

"சாந்த் பதே சிங்கை இழந்து துயரத்தில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்குமாறு கோருகிறேன்."

சட்டமன்ற உறுப்பினர்

சுருளிவேல் அறிவிப்பு

சென்னை, அக். 31—

போடி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுருளிவேல் அவர்கள் அறிவிப்பதாவது:—

அன்புள்ள மாணவர் கழகத் தோழர்களே! தலைமைக் கழகத்தின் கட்டளைக்கிணங்க அக். 19-ம் நாள்முதல் நான் மேற்கொண்டிருந்த சுற்றுப்பயணம் தலைமைக் கழகம் ஆணையிட்டதற்கிணங்க நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் உரிய முன்னறிவிப்புடன் துவங்கும். ஒத்துழைத்த நல்கிய மதுரை, நெல்லை, முகவை, திருச்சி, தஞ்சை மாவட்ட கழக மாணவர்களுக்கும் தாய்க் கழக முன்னணி செயல் மறவர்களுக்கும் எனது பணிவான நன்றியதலைக் காணிக்கையாக்குகிறேன்."